செ.வெ.எண்:129 நாள்:28.02.2018

**திருநெல்வேலி மாவட்டம் மானூர் ஒன்றியம் வாகைகுளம் நரிக்குறவர் காலனியில் நடைபெற்ற சிறப்பு மானுநீதி நாள் முகாமில் 6 நரிக்குறவ மக்களுக்கு சமூக பாதுகாப்பு திட்ட நலத்திட்ட உதவிகளையும், 3 விவசாய கூட்டு பொறுப்பு குழுக்களுக்கு ரூ.26.08 லட்சம் மதிப்பிலான கடனுதவிகளை 1 விவசாயிக்கு பால் பண்ணை அமைக்க ரூ.4.50 லட்சம் மதிப்பிலான கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

----

திருநெல்வேலி மாவட்டம் மானூர் ஒன்றியம் வாகைகுளம் நரிக்குறவர் காலனியில் சிறப்பு மானுநீதி நாள் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.02.2018) நடைபெற்றது. மாவட்ட சட்டபணிகள் ஆணைக்குழு செயலர் மற்றும் சார்பு நீதிபதி திரு.ராமலிங்கம் அவர்கள் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் நரிக்குறவ மக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். பின்னர் 6 நரிக்குறவ மக்களுக்கு சமூக பாதுகாப்பு திட்ட நலத்திட்ட உதவிகளையும், 3 விவசாய கூட்டு பொறுப்பு குழுக்களுக்கு ரூ.26.08 லட்சம் மதிப்பிலான கடனுதவிகளை 1 விவசாயிக்கு பால் பண்ணை அமைக்க ரூ.4.50 லட்சம் மதிப்பிலான கடனுதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் நரிக்குறவ சமுதாய மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திட புராஜக்ட் ஸ்பார்க் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டதின் நோக்கம் நரிக்குறவ சமுதாய குழந்தைகள் குறைந்தது 12ம் வகுப்பு முடித்து பட்டப்படிப்பு படிப்பது, அரசு நிர்ணித்துள்ள திருமண வயதில் திருமணம் செய்வது, வாழ்வாதாரத்தை முன்னேற்ற உதவும் கடன்வசதி உள்ளிட்ட மறுவாழ்வு திட்டங்களை செயல்படுத்துவது உள்ளிட்ட அம்சங்கள் ஆகும். புராஜக்ட் ஸ்பார்க் திட்டத்தில் சமுதாயத்தில் உள்ள வேலைவாய்ப்புகள் குறித்து இவர்கள் அறிந்தும் கொள்ளும் வகையில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், நீதிபதி உள்ளிட்ட அலுவலர்களுடன் நரிக்குறவ மாணவ, மாணவர்கள் 1 நாள் இருந்து அவர்களின் பணிகளை பார்க்கும் வகையில் செய்யப்படுகிறது. அடுத்த தலைமுறை குழந்தைகள் உயர்கல்வி கற்று உயர் பதவிகளை பெற வேண்டும். என்பது தான் இத்திட்டதின் நோக்கமாகும்.

குழந்தை திருமண தடை சட்டம் நமது நாட்டில் உள்ளது. 18 வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கு திருமணம் செய்துவைத்தால் தண்டணைக்குறிய குற்றமாகும். தமிழக அரசு உணவிற்கு விலையில்லா அரிசி வழங்குகிறது. படிப்பதற்கு தேவையான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. எல்லாம் உதவிகளும் இருக்கும் போது குழந்தைகளை கண்டிப்பாக படிக்க வைக்க வேண்டும். உங்களுக்கு தேவையான வீடு உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தர தயாராக உள்ளோம் நீங்கள் விழிப்புணர்வு பெற்று குழந்தை

திருமணங்களை நிறுத்தி உங்களது குழந்தைகளை கல்வி கற்க வைத்து உயர் பதவிகள் பெற்று வாழ்க்கையில் முன்னேற ஒத்தழைக்க வேண்டும். என பேசினார்.

முன்னதாக இப்பகுதியில் நரிக்குறவ மக்களுக்கு தலா ரூ.3 லட்சம் மதிப்பில் கட்டி கொடுக்கப்பட்ட 5 வீடுகளை பயனாளிகளுக்கும், மாலை நேர பயிற்சி முகாமிக்கு விளையாட்டு உபகரணங்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, துணை ஆட்சியர்கள் (பயிற்சி) திருமதி.மயில், செல்வி லெட்சுமிபிரியா, மானூர் வட்டாட்சியர் திருமதி.மோகனா, மானூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பிரான்ஸிஸ் மகாராஜன், திரு.பிரம்மநாயகம், கங்கைகொண்டான் கூட்டுறவு வங்கி தலைவர் திரு.முருகன், உக்கிரன்கோட்டை கூட்டுறவு சங்க தலைவர் திரு.வெங்கடாச்சலம், செயலர் திரு.முகமது உசேன் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.